# Indian Economy Model Test Questions 9 in Tamil With Answer

1. மக்கள் தொகை வெடிப்பு என்பது எதனுடன் தொடர்புடையது

   **அ. அதிக பிறப்பு விகிதம் மற்றும் குறைந்த இறப்பு விகிதம்**

   ஆ. அதிக பிறப்பு விகிதம் மற்றும் அதிக இறப்பு விகிதம்

   இ. குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் அதிக இறப்பு விகிதம்

   ஈ. குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் குறைந்த இறப்பு விகிதம்

2. இந்திய வேளாண்மையின் உற்பத்தி திறன் குறைவாக இருப்பதற்கு காரணம்

   அ. திறமையற்ற உழவு நுட்பங்கள்

   ஆ. சிக்கனமான மற்றும் எளிமையான கடன் பெற தட்டுப்பாடு

   இ. பெரும்பாலான பகுதிகளில் நீர்ப்பாசன வசதியின்மை

   **ஈ. இவை அனைத்தும்**

3. மூலதனம் மிகவும் தேவையானது ஆனால் அது மட்டும் முன்னேற்றத்திற்கு போதுமானது அல்ல என்று கூறியவர்

   அ. நர்க்ஸ் ஆ. டோமர்

   இ. ஆடம் ஸ்மித் **ஈ. மார்ஷல்**

4. கீழ்க்கண்டவற்றுள் எது முதன்மை துறையில் சேராதது?

   அ. காடு வளர்ப்பு ஆ. மீன் பிடித்தல்

   **இ. குடிநீர் விநியோகம்** ஈ. சுரங்கம் மற்றும் குவாரி

5. இந்தியா, மேலை நாடுகளுக்கு கடல் வாணிகத்தில் ஏற்றுமதி செய்த பொருள்களில் முதலிடம் பெறுவது

   அ. மிளகு ஆ. சந்தனம்

   **இ. முத்து** ஈ. தந்தம்

6. முதன்மை வங்கி திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

   **அ. 1969** ஆ. 1965 இ. 1968 ஈ. 1972

7. நகர மற்றும் கிராம குடியிருப்புகளுக்குள்ள அடிப்படை வித்தியாசம்

   **அ. மக்கள்தொகை அளவு** ஆ. மக்கள் அடர்த்தி

   இ. செயல்பாடுகள் ஈ. அமைவிடம்

8. ஏற்றுமதி வாணிபத்தில், கடன் கடிதம் யாரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

   அ. ஏற்றுமதியாளரால் **ஆ. இறக்குமதியாளரால்**

   இ. சுங்க அதிகாரியால் ஈ. கப்பல் கம்பெனியால்

9. தலா வருமானம் இவ்வாறு கணக்கிடப்படுகிறது?

**அ. மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) மக்கள் தொகையால் வகுத்தல்**

ஆ. மொத்த நாட்டு உற்பத்தியை (GNP) மக்கள் தொகையால் வகுத்தல்

இ. மொத்த நாட்டு உற்பத்தியை (GNP) மக்கள் தொகையால் பெருக்குதல்

ஈ. மொத்த நாட்டு உற்பத்தியை (GNP) வேலைக்குச் செல்வோரின் எண்ணிக்கையில் பெருக்கி வருகிறது

10. வங்கி வீதம் எப்போது உயர்த்தப்படுகிறது?

அ. பணவாட்டம் **ஆ. பணவீக்கம்**

இ. விலை நிலையாக இருத்தல் ஈ. வேலையின்மை

11. மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை எந்த குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டது?

அ. அசோக் மேத்தா குழு **ஆ. பல்வந்த்ராய் மேத்தா குழு**

இ. சீர்திருத்த குழு ஈ. நிர்வாகக் குழு

12. பெரிய 'பொருளாதார மந்தம்' ஏற்பட்ட ஆண்டு

அ. 1830 **ஆ. 1930** இ. 1980 ஈ. 1880

13. இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

அ. 1947 **ஆ. 1951** இ. 1956 ஈ. 1961

14. கீழ்க்கண்ட பொதுத்துறை நிறுவனங்களில் 'நவரத்னா' அந்தஸ்து பெறாத நிறுவனம் எது?

அ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம் ஆ. மகாநகர் தொலைபேசி நிஹாம் லிமிடெட்

**இ. பாரத் சஞ்சார் நிஹாம் லிமிடெட்** ஈ. இந்திய எண்ணெய் கழகம்

15. முதல் இந்திய வங்கி எது?

அ. வர்த்தக வங்கி ஆ. இம்பீரியல் வங்கி

இ. பிரசிடென்சி வங்கி, கல்கத்தா **ஈ. இவற்றும் எதுவுமில்லை**

16. C2C என்றால்

அ. கன்சியுமர் டு கன்சியுமர் ஆ. கஸ்டமர் டு கஸ்டமர்

**இ. கஸ்டமர் டு கன்சியுமர்** ஈ. இவை அனைத்தும்

17. எந்த வகையான வங்கி கணக்கில் வைப்பாளர், எந்த கட்டுப்பாடும் இல்லாமல் ஒரே நாளில் எத்தனை முறை வேண்டுமானாலும் பணம் செலுத்தவோ அல்லது எடுக்கவோ முடியும்?

அ. சேமிப்பு கணக்கு ஆ. நிலை வைப்பு

**இ. நடப்பு கணக்கு** ஈ. தொடர்வைப்பு

18. திட்டமிடுதலில் முன்னோடியாக விளங்கும் நாடு

**அ. சோவியத் ரஷ்யா** ஆ. இந்தியா

இ. அமெரிக்கா ஈ. ஜப்பான்

19. இந்தியாவில் வேளாண்மை கணக்கெடுப்பு முதலில் மேற்கொண்டது

அ. 1965-1966 **ஆ. 1970-1971**

இ. 1975-1976 ஈ. 1980-1981

20. பத்தாவது திட்ட காலத்தில் GDP வளர்ச்சி இலக்கு

அ. 8.7% ஆ. 9% இ. 9.3% **ஈ. 8%**

21. கீழ்க்கண்டவற்றுள் எது ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரமற்ற காரணி ஆகும்?

1. சமுதாய அமைப்பு முறை 2. சமயம்

3. சாதி 4. தொழில் முயல்வோர்

இவற்றுள்

அ. 1 மற்றும் 2 சரியானவை ஆ. 1, 3 மற்றும் சரியானவை

**இ. 1, 2 மற்றும் 3 சரியானவை** ஈ. 4 மட்டும் சரியானது

22. இந்திய வேளாண்மை தொழிலாளர்களின் முதன்மையான பொருளாதார பிரச்சனை

அ. குறைவான வருவாய் **ஆ. அதிக அளவிலான கடன்சுமை**

இ. ஏழ்மையான வாழ்க்கைத்தரம் ஈ. அமைப்பற்ற நடைமுறைகள்

23. தொழில் நலிவு என்பது

அ. தொழிற்சாலையில் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கப்படுதல்

ஆ. வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாமை

**இ. உபரி வருமானத்தை தானே உருவாக்க முடியாமை மற்றும் கடன் பெற்றுதான் தொழிலை நடத்த முடியும் என்ற நிலை**

ஈ. தொழிற்சாலை உரிமம் கைமாறிவிடுதல்

24. நவீனகால வளர்ச்சிக்கு கருத்துக் கோட்பாடாக/ கோட்பாடுகளாக கருதப்படுபவை எது/எவை?

அ. நாட்டின் வருமான வளர்ச்சி ஆ. தனிநபர் வருமான வளர்ச்சி

இ. அதிகப்படியான மூலதனம் **ஈ. இவை அனைத்தும்**

25. புதிய தொழில் முனைவோர் முகமை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

அ. 1956 ஆ. 1961 **இ. 1980** ஈ. 1986

26. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி பெண்கள் எழுத்தறிவு விகிதம் 30% குறைவாக உள்ள மாவட்டங்கள் உள்ள மாநிலம்

அ. கேரளம் ஆ. தமிழ்நாடு

**இ. உத்திரப்பிரதேசம்** ஈ. கர்நாடகம்

27. இரண்டாம் ஐந்தாண்டு திட்டகாலத்தில் மூலதன உற்பத்தி வீதத்தை திட்டக்குழு எந்த விகிதத்தில் திட்டமிட்டது?

அ. 1 : 5 : 1 ஆ. 5 : 4 : 1 **இ. 2 : 3 : 1** ஈ. 4 : 3 : 7

28. HDI என்பதின் விரிவாக்கம்

அ. ஹிந்தி வளர்ச்சி நிறுவனம் **ஆ. மனித வளர்ச்சி குறியீடு**

இ. மனித வளர்ச்சி முதலீடு ஈ. இவற்றுள் எதுவுமில்லை

29. ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் தற்போதைய கவர்னர் யார்?

அ. பி.ஒய்.ரெட்டி ஆ. பி.ரங்கராசன்

இ. பிமல் ஜலான் **ஈ. டி.சுப்பாராவ்**

30. 12வது நிதிக்குழுவின் தலைவர் யார்?

**அ. சி. ரங்கராஜன்** ஆ. கே.சி. பண்ட்

இ. கேல்கர் ஈ. மாதவன் ரவிந்ரா

31. எது சரியாக பொருந்தாதது?

**அ. மத்திய கண்காணிப்பு ஆணையம் - கிரிபாளனி குழு**

ஆ. அனைத்து இந்திய பணிகளின் தந்தை - சர்தார் வல்லபாய் பட்டேல்

இ. கூட்டி சேரா இயக்கத்தின் பொதுசெயலாளர் - டாக்டர் ராஜேந்திர பிரசாத்

ஈ. மத்திய பணியாளர் தேர்வாணையம் - ஏ.எம்.குஸ்ரு

32. நிலத்தின் அளவு மீதான வரியை பரிந்துரை செய்த குழு

அ. ஜான்மத்தாய் குழு ஆ. பூதலிங்கம் குழு

இ. வான்சூ குழு **ஈ. ராஜ் குழு**

33. இந்திரா ஆவாஸ் திட்டத்தின் நோக்கம்

அ. கடன் உதவி அளித்தல் **ஆ. இலவச வீட்டு வசதி கொடுத்தல்**

இ. போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

34. பொருளாதார சீர்திருத்தத்தை (தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலக மயமாக்கல்(LPG)) இந்தியாவில் 1991-ஆம் ஆண்டு முன்னாள் நிதியமைச்சர் ______ அறிமுகப்படுத்தினார்.

**அ. டாக்டர் மன்மோகன்சிங்** ஆ. திரு. ப. சிதம்பரம்

இ. திரு. பிரனாப் முகர்ஜி ஈ. திரு பி.வி. நரசிம்மராவ்

35. இந்தியாவின் இறக்குமதியில் எந்த ஒரு தனிப் பொருள் மிக அதிகமாக உள்ளது?

அ. மூலதனப் பொருட்கள்

ஆ. உணவு மற்றும் உணவு சார்ந்த பொருட்கள்

winmeen.com

இ. பொன்

**ஈ. எண்ணெய் (எரிபொருள்)**

36. இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி, உள்நாட்டு வங்கிகள் தங்களுடைய மொத்த டெபாடிட்டில் _______ சதவீதம் முன்னுரிமை துறைக்கு அளிக்க வேண்டும்.

**அ. 32** ஆ. 40 இ. 10 ஈ. 25

37. புதிய விவசாய தொழில்நுட்பம் பற்றிய பொருத்தமான விளக்கம் எது?

அ. நிலம் அதிகப்படுத்துதல் **ஆ. உழைப்பு அதிகரிக்கப்படுதல்**

இ. உழைப்பு ஒதுக்கப்படுதல் ஈ. நிலமும் உழைப்பும் அதிகப்படுதல்

38. பொது உடமை கொள்கை அறிவிக்கப்பட்ட திட்டம்

அ. முதல் ஐந்தாண்டு திட்டம் ஆ. வருடாந்திர திட்டங்கள்

**இ. இரண்டாவது திட்டம்** ஈ. எட்டாவது திட்டம்

39. 11-வது ஐந்தாண்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

அ, 2005 – 2010 ஆ. 2002-2007 **இ. 2007-2012** ஈ. 2006-2011

40. 2001ம் ஆண்டின் தேசிய மனிதவள அறிக்கையின் படி தமிழ்நாடு பெற்றுள்ள இடம்

அ. ஏழாவது இடம் **ஆ. மூன்றாவது இடம்**

இ. நான்காவது இடம் ஈ. ஒன்பதாவது இடம்

41. தேசிய வருமானத்தை விஞ்ஞான முறைப்படி கணக்கெடுப்பு செய்தவர் யார்?

அ. பேராசிரியர் ஹேலனாபிஸ் ஆ. டாக்டர் கே.என். ராஜ்

**இ. வி.கே. ஆர். வீ.ராவ்** ஈ. டாக்டர் வக்கீல்

42. ராஜீவ் காந்தி உதயமி மித்ரா யோஜ்னா திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ. 2006 ஆ. 2007 **இ. 2008** ஈ. 2009

43. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் எந்த ஆண்டு தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டது?

**அ. 1980** ஆ. 1990 இ. 1970 ஈ. 1960

44. ‘செல்வச் சுரண்டல் கோட்பாட்டை’ தந்தவர்

அ. இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்கள் **ஆ. தாதாபாய் நௌரோஜி**

இ. வீரா ஆன்ஸ்டி ஈ. வி.வி. பட்

45. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி பயன்படுத்தும் கருவி

**அ. ரிபோ வீதம் மற்றும் பண இருப்பு விகிதம் அதிகரித்தல்**

ஆ. ரிபோ வீதம் குறைத்தல் மற்றும் பண இருப்பு விகிதம் அதிகரித்தல்

இ. ரிபோ வீதம் குறைத்தல் மற்றும் பண இருப்பு அளவு குறைத்தல்

ஈ. வங்கிக்கு தரும் வட்டி வீதத்தை குறைத்தல்

46. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று(A): குடிமையியல் நிர்வாகத்திற்கும், இராணுவத்திற்கும் அதிகமாக செலவு செய்வது வரவேற்கத் தக்கது அல்ல

காரணம்(R): இந்த இருதுறைகளும் நாட்டின் நிலையான வருமான வளர்ச்சி ஈட்டும் சொத்துக்களாக உருவாவதில்லை

கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையை தேர்ந்தெடுக்க.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல**

இ. (A) சரி; ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு; ஆனால் (R) சரி

47. பாரத பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம் (PMEGP) இந்தியாவில் கீழ்க்கண்ட திட்டங்கள் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது?

**அ. பாரதப் பிரதமர் வேலை வாய்ப்புத் திட்டம் (PMARY) மற்றும் கிராமிய வேலைவாய்ப்பு (REGP).**

ஆ. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP) மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)

இ. இந்திரா குடியிருப்புத் திட்டம் (IAY) மற்றும் கிராமிய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (IRDP)

ஈ. சிறுவிவசாயி முன்னேற்ற திட்டம் (SFDA) மற்றும் குறுவிவசாயி முன்னேற்ற திட்டம் (MFAL)

48. இந்தியா விடுதலை பெற்ற 50-வது ஆண்டு தொடங்கப்பட்ட திட்டம்

அ. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் ஆ. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

இ. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டம் **ஈ. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம்**

49. சமுதாய முன்னேற்றத்தின் விளை நிலம்

**அ. பள்ளி** ஆ. கல்லூரி

இ. பல்கலைக் கழகம் ஈ. அலுவலகம்

50. “ஆப்ரேஷன் ஃபிளாட்” என்ற திட்டம் எதனுடன் தொடர்புடையது?

**அ. பால் உற்பத்திப் பெருக்கம்** ஆ. நீர்வள மேம்பாடு

இ. வெள்ளத்தடுப்பு ஈ. கோழி வளர்ப்பு மேம்பாடு

51. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

**அ. 2007** ஆ. 2009 இ. 2010 ஈ. 2008

52. இந்திய ரிசர்வ் வங்கி, வங்கியாகவும், முகவராகவும் செயல்படுவது

அ. உலக வங்கிக்காக ஆ. பன்னாட்டு பண நிதிக்காக

**இ. இந்திய அரசுக்காக** ஈ. பன்னாட்டு நிதி கழகத்திற்காக

53. கரீபீ ஹட்டா என்பதன் பொருள்

அ. வேலையின்மை **ஆ. வறுமை அகற்றல்**

இ. பசுமைப் புரட்சி ஈ. சேவைகள்

54. ஆறு மாதத்திற்கு மேலாக உள்ள காசோலை பின்வருமாறு அழைக்கப்படுகிறது

அ. காலக்கெடு முடிந்த காசோலை **ஆ. பின்தேதியிட்ட காசோலை**

இ. சாதாரண காசோலை ஈ. கீறலிட்ட காசோலை

55. 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலம்

அ. 2006-2011 **ஆ. 2007-2012** இ. 2008-2013 ஈ. 2005-2010

56. ஒரு இந்தியனின் தலா வருமானம் என்ன?

அ. ரூ. 1040 **ஆ. ரூ. 370** இ. ரூ. 250 ஈ. ரூ. 560

57. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் காலம்

அ. 2004-2009 **ஆ. 2007-2012** இ. 2005-2010 ஈ. 2006-2011

58. பொருளியலின் சராசரி வளர்ச்சியைக் கண்டறியப்பயன்படும் சரியான சராசரி

அ. எடையிட்ட சராசரி ஆ. பெருக்குச் சராசரி

**இ. கூட்டுச் சராசரி** ஈ. முகடு

59. பொருளாதாரத்தின் 'நிகர மதிப்பு' என்பது

அ. கடனும் பாதுகாப்பு நிதியும்

ஆ. வங்கிக் கடனும், அரசாங்க கடன் பத்திரங்களும்

**இ. பங்கு மூலதனமும், பாதுகாப்பு நிதியும்**

ஈ. பங்கு மூலதனமும் வங்கி கடனும்

60. ஊழல் தொடர்பான சந்தான குழுவின் முக்கிய நோக்கு

**அ. அரசு துறைகளில் உள்ள ஊழல்**

ஆ. நீதித்துறையில் உள்ள ஊழல்

இ. உள்ளாட்சி அரசுகளில் உள்ள ஊழல்

ஈ. கல்வி நிறுவனங்களில் உள்ள ஊழல்

61. நேரடி பார்வை முறை எங்கு பயன்படுத்தப்படுகிறது?

**அ. முதல்நிலை விவரம்** ஆ. அலைவெண் பரவல்

இ. தன்மதிப்பு நிலை விவரம் ஈ. இரண்டாம் நிலை விவரம்

62. தேசிய வருமான வளர்ச்சி வீதத்தை தீர்மானிப்பது

அ. முதலீட்டு வருமான விகிதம்

ஆ. மக்கட் தொகைப் பெருக்க வீதம்

**இ. உற்பத்திப் பெருக்க வீதம்**

ஈ. பண்ட நுகர்வு விகிதம்

63. 'முதலீட்டு விற்பனை' என்றால்

அ. அரசாங்க குழுமங்களின் விற்பனை

**ஆ. பொது நிறுவனங்களில் உள்ள அரசின் பங்கு விற்பனை**

இ. நலிவடைந்த தொழிற்குழுமங்களின் விற்பனை

ஈ. அரசாங்க குழுமங்களை தனியாருக்கு விற்பனை செய்தல்

64. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

**அ. 1935** ஆ. 1949 இ. 1950 ஈ. 1957

65. இலாப நோக்கத்திற்காக செயல்படாத வங்கியினைக் குறிப்பிடுக.

அ. ஆந்திரா வங்கி **ஆ. இந்திய ரிசர்வ் வங்கி**

இ. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஈ. கனரா வங்கி

66. தேசிய வருமானம் ஒரு

அ. மத்திய அரசின் வருமானம்

ஆ மத்திய மற்றும் மாநில அரசின் வருமானம்

**இ. மொத்த காரணி வருமானம்**

ஈ. பொதுத்துறையின் இலாப வருமானம்

67. கீழ்க்கண்டவைகளில் எவை சரியாக பொருத்தப்படவில்லை?

அ. நாடுகளின் செல்வம் - ஆடம் ஸ்மித்

ஆ. வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம்
பற்றி ஒரு பொதுக் கோட்பாடு - கீன்ஸ் J.M.

**இ. நாணய மேற்கோடு - குரோத்தர்**

ஈ. அதிக பணம் குறைந்த பொருட்களை துரத்துவது - மில்டன் ப்ரைடுமேன்

68. பட்டியல் 1ஐ பட்டியல் 2உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. BASEL II | 1. வெளியிருப்பு கடன் |
| ஆ. SEBI | 2. காப்பீட்டு திட்டம் |
| இ. NPA | 3. மூலதன சந்தை |
| ஈ. IRDA | 4. வங்கி மறுமலர்ச்சி |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 1 | 2 |
| **ஆ.** | **4** | **3** | **1** | **2** |
| இ. | 3 | 2 | 1 | 4 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

69. இந்திய அரசால் எந்த ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது பசுமைப் புரட்சி என்று கூறப்படுகிறது?

**அ. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்** ஆ. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

இ. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் ஈ. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

70. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் எந்த குழுவின் பரிந்துரையால் உருவாக்கப்பட்டது?

அ. கோத்தாரிகுழு **ஆ. சந்தானம் குழு**

இ. சர்க்காரியா குழு ஈ. இராஜமன்னார் குழு

71. பகிரங்க வேலையின்மையென்பது

அ. வேலை செய்ய விரும்பாதோர்களை குறிக்கிறது

ஆ. விரும்பியும் வேலை கிடைக்காதோர்

**இ. மேம்பட்ட வேலை தேடி இருக்கின்ற வேலையை கைவிட்டோர்**

ஈ. ஊழல் பழக்கத்தால் வேலையை இட்டு நீக்கப்பட்டோர்

72. "செலவிட இயன்ற வருமானம்" என்றால் என்ன?

அ. தனிநபர் வருமானம் மான்யம் நீங்கலாக

**ஆ. வரி செலவு போக உள்ள நிகர வருமானம்**

இ. தனிநபர் வருமானம் மாற்று செலவு நீங்கலாக

ஈ. தேசிய வருமானம் தேய்மானம் நீங்கலாக

73. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அதிக அளவு பங்கினை இன்றும் அளித்து வருவது

அ. வேளாண்மை ஆ. தொழில்சார்ந்த உற்பத்தித்துறை

இ. கட்டுமானத்துறை **ஈ. சேவைத்துறை**

74. பண சுழற்சி வேகத்தை கட்டுப்படுத்தாத கூறுகள்

அ. பணப்புழக்க அளவு ஆ. வணிக நிறுவனங்களின் விற்பனை மதிப்பு

**இ. கடன் வசதிகள்** ஈ. வாணிபச் சூழல்

75. படங்கள் மற்றும் வரைபடங்கள் எதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன?

அ. புள்ளி விவரங்களை சேகரிக்க ஆ. பகுப்பாய்வு செய்ய

**இ. பார்வைக்குகந்த முறையில் வைக்க** ஈ. தொகுக்க

76. இந்திய அரசால் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (NREP) எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

அ. 1978 ஆ. 1979 **இ. 1980** ஈ. 1982

77. SARFAESI சட்டம் எந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டது?

அ. பங்குச் சந்தையை கட்டுப்படுத்த ஆ. மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்த

இ. நிதித்திட்டத்தை சீர்செய்ய **ஈ. வங்கிகளின் எண்ணங்களை செயல்படுத்த**

78. அகன்ற பணம் என்றால் என்ன?

**அ. மக்களிடம் கைவசம் இருக்கும் நோட்டு + மக்களின் தேவை வைப்பு**

ஆ. மக்களின் கைவச நோட்டு + அஞ்சல் நிறுவனம் சேமிப்பு வைப்பு

இ. மக்களின் கைவச நோட்டு + வங்கிகளின் பொதுகால வைப்பு + தேவை வைப்பு

ஈ. மக்களின் கைவச நோட்டு + வருவிக்கும் வைப்பு

79. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் சட்டம் 100 நாட்கள் வேலை கொடுப்பதற்காக ______ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

அ. 2003 ஆ. 2004 **இ. 2006** ஈ. 2002

80. கீழ்க்கண்டவைகளில் அதிகமாக நாட்டு உற்பத்திக்குக் (GDP) காரணமாக இருப்பது

அ. விவசாயம் ஆ. தொழில்துறை

**இ. சேவைகள்** ஈ. ஏற்றுமதி

81. கீழ்க்கண்டவைகளில் எது தமிழ்நாட்டில் பொருளாதாரத்தின் அம்சம்?

அ. கிராமத்திலிருந்து நகரங்களுக்கு அதிக இடப்பெயர்ச்சி

ஆ. குறைந்த விவசாயம் சாரா வேலை வாய்ப்பு

**இ. அதிக நகர வளர்ச்சி**

ஈ. குறைந்த நகர வளர்ச்சி

82. பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும் போது சேவை துறையின் பங்கு, தேசிய வருமானத்தில்

**அ. அதிகரிக்கும்** ஆ. குறையும்

இ. மாற்றம் இருக்காது ஈ. விகிதாச்சாரத்தில் மாற்றம் இருக்காது

83. கீழ்க்கண்ட அமைப்புகளில் எந்த ஒன்றில் இந்தியா உறுப்பினராக உள்ளது?

**அ. ஆசிய வளர்ச்சி வங்கி**

ஆ. ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு

**இ. கொழுப்பு திட்டம்**

ஈ. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம்

84. தன்னார்வ அமைப்புகளுக்கு நிதியுதவி அளித்து உயர்த்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

அ. காதி மற்றும் கிராம தொழில் குழுமம்

ஆ. இந்திய மக்களின் மேம்பாட்டிற்கான செயலமைப்பு

இ. ஊரக தொழில்நுட்பம் மற்றும் மக்களின் செயலை முன்னேற்றுவதற்கான குழு

**ஈ. இவை அனைத்தும்**

85. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று(A): பிராந்திய வளர்ச்சி வேறுபாடுகள், திட்டமிடுதல் மூலம் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது.

காரணம் (R): இந்திய வேளாண் தொழில்நுட்பம் அளவு பொதுவானது. ஆனால் வளமை பொதுவானதல்ல.

கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையை தேர்ந்தெடுக்க.

அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

**ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல**

இ. (A) சரி; ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு; ஆனால் (R) சரி

86. நிலச்சீர்திருத்தங்கள் கீழ்க்கண்ட எதை உட்கொண்டிருக்கவில்லை?

அ. இடைத்தரகர்களை ஒழித்தல்

ஆ. நில உடமைகளை ஒருங்கிணைத்தல்

இ. கூட்டுறவு விவசாயம்

**ஈ. விவசாயிகளுக்கு வீட்டுக்கடன் அளித்தல்**

87. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட வருடம்

**அ. 1978-79** ஆ. 1979-80 இ. 1980-81 ஈ, 1981-82

88. இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கி எது?

அ. இந்தியன் வங்கி

ஆ. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

இ. கனரா வங்கி

**ஈ. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா**

89. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி:

கூற்று(A): அட்டவணையின் அடிப்படை வகைப்படுத்துதல்

காரணம்(R): முதலில் விவரங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. பின்னர் அட்டவணையிடப்படுகிறது.

கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையை தேர்ந்தெடுக்க.

**அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல

இ. (A) சரி; ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு; ஆனால் (R) சரி

90. நேர்முக வரி என்பது கீழ்க்கண்டவற்றில் எது?

அ. விற்பனை வரி ஆ. உற்பத்தி வரி

இ. சுங்க வரி **ஈ. இவற்றில் எதுவுமில்லை**

91. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி

கூற்று(A): விளக்கப்படங்கள் ஒப்பிட்டுப் பார்க்க மட்டுமே பயன்படுகின்றன.

காரணம்(R): விளக்கப்படங்களை கணித தொடர்பாக படிக்க இயலாது.

கீழ்க்கண்ட குறியீடுகளுக்கு ஏற்ப உங்களது விடையை தேர்ந்தெடுக்க.

**அ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் அல்ல

இ. (A) சரி; ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு; ஆனால் (R) சரி

92. தனிப்பட்ட இணைப் பொருளாதாரம் என்பது

1. கறுப்பு பொருளாதாரம்

2. கணக்கில் இல்லாடஹ் பொருளாதாரம்

3. கலப்பு பொருளாதாரம்

4. முதலாளித்துவ பொருளாதாரம்

இவற்றுள்

**அ. 1 மற்றும் 2 சரியானவை** ஆ. 1 மட்டும் சரியானது

இ. 3 மற்றும் 4 சரியானவை ஈ. இவற்றுள் எதுவுமில்லை

93. சுகாதார காப்பீட்டு வாணிபத்துடன் தொடர்புடையது

**அ. ஆயுள் காப்பீட்டு நிறுவனம்** ஆ. யூ.டி.ஐ.

இ. ஜி.ஐ.சி ஈ. மாநில வணிக நிறுவனம்

94. மகலனோபிஸ் மாதிரியில் கனரக தொழிற்சாலைகளின் உற்பத்தி உபயோகிக்கப்படுவது

அ. ஏற்றுமதி

**ஆ. கனரக தொழிற்சாலைகளை விரிவுபடுத்த**

இ. கூலிப் பொருட்களை உற்பத்தி செய்ய

ஈ. ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்ய

95. மிகவும் நீர்மைத் தன்மை வாய்ந்த பணம் எது?

**அ. $M_1$** ஆ. $M_2$ இ. $M_3$ ஈ. $M_4$

96. தனிநபர் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி

**அ. நேர்முக வரி** ஆ. மறைமுக வரி

இ. சொத்து வரி ஈ. எதிர்முக விகிதவரி

97. குடிசை மாற்று வாரியம் தமிழ்நாட்டில் எந்த வருடம் நிறுவப்பட்டது?

அ. 1950 ஆ. 1960 **இ. 1970** ஈ. 1980

98. கீறலிடப்பட்ட காசோலையை பணமாக்க

அ. பாரத ஸ்டேட் வங்கியின் மூலமாக பெறலாம்

ஆ. பணம் செலுத்துபவர் மூலமாக பெறலாம்

**இ. ஏதாவது ஒரு வங்கியின் மூலமாக பெறலாம்**

ஈ. இவற்றுள் எதுவுமில்லை

99. மதிப்புகூட்டு வரி எதை சார்ந்தவை?

**அ. உற்பத்தி வரி** ஆ. வருமான வரி

இ. எஸ்டேட் வரி ஈ. விவசாய வருமான வரி

100. அரசின் மக்கள் நலப்பணிக்கான மிகப்பெரிய நிர்வாக சவால்கள்

அ. மக்கள்தொகை பெருக்கம் மற்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் நிலை

ஆ. சமுதாயச் சச்சரவுகள்

இ. சுற்றுச்சூழல் மாசு

**ஈ. இவை அனைத்தும்**

winmeen.com